**சார்பு நீதிமன்றம், திருத்துறைப்பூண்டி**

**MCOP.65/2024**

2026 ஆம் ஆண்டு மார்ச் மாதம் 26 ஆம் நாள் வியாழன் கிழமை

எ.ம.சா.1 இந்திய சாட்சி சட்டத்தின் கீழ் திரு. த.பாரதி பலகை எழுத்தர் நிலை–2 அவர்களால் சாட்சியிடம் சத்திய பிரமாணம் செய்யப்பட்டது.

| | | | |
|---|---|---|---|
| பெயர்: | புரந்தரதாஸ் | த/பெ. : | திருமலை |
| கிராமம்: | சென்னை | தாலுக்கா: | சென்னை சேத்பட் |
| மதம்: | இந்து | தொழில்: | துணை மேலாளர், மேக்மா ஜெனரல் இன்சூரன்ஸ் கம்பெனி லிமிடெட், சென்னை. |
| வயது: | 32 | முகவரி: | சென்னை |

Solemnly affirmed in accordance with the provisions of Act X of – 1873 on day of 26.03.2026

**<u>முதல் விசாரணை:–</u>**

நான் இந்த மனுவில் 2ம் எதிர்மனுதாரர் தரப்பு சாட்சி ஆவேன். நான் எனது முதன்மை சாட்சியத்தை நிரூபண வாக்குமூலமாக தாக்கல் செய்துள்ளேன். அதில் உள்ள விவரங்கள் எனக்கு தெரியும். அதில் உள்ள கையெழுத்து என்னுடையது தான். நான் சொல்லி தான் தயார் செய்யப்பட்டது.

| | | | |
|---|---|---|---|
| எ.ம.சா.ஆ.1 | | TN 50 AT 9715 வாகனத்தின் இன்சூரன்ஸ் பாலிசி | நகல் |
| எ.ம.சா.ஆ.2 | | TN 50 AT 9715 வாகனத்தின் ஆர்.சி.புக் | நகல் |

மனுதாரர் தாக்கல் செய்த மனு தள்ளுபடி செய்ய வேண்டுமென பிரார்த்திக்கிறேன்.

**1<u>ம் எதிர்மனுதாரர் தரப்பில் குறுக்கு விசாரணை:–</u>**

நான் நீதிமன்றத்திலிருந்து அனுப்பட்ட சம்மன் அடிப்படையில் வந்தேனா

என்றால் இல்லை. நீதிமன்றத்தில் சாட்சி சொல்லும் எங்கள் நிறுவனத்திலிருந்து ஏதாவது கடிதம் எடுத்து வந்துள்ளேனா என்றால் இல்லை. நான் துணை மேலாளர் என்பதால் கடிதம் தேவையில்லை. 1ம் எதிர்மனுதாரர் எங்கள் நிறுவனத்தில் காப்பீடு செய்துள்ளாரா என்றால் நிபந்தனைக்கு உட்பட்டு காப்பீடு செய்துள்ளார். விபத்து நடந்த சமயத்தில் காப்பீடு நிலுவையில் இருந்தது என்றால் சரிதான். 1ம் எதிர்மனுதாரர் மனுதாரர் கோரியுள்ள இழப்பீடு தொகை காப்பீடு நிலுவையில் இருப்பதால் கொடுக்க கடமைப்பட்டவர் அல்ல என்றும், 2ம் எதிர்மனுதாரர் தான் இழப்பீடு தொகை கொடுக்க கடமைப்பட்டவர் என்று சொன்னால் சரியல்ல.

<u>மனுதாரர் தரப்பில் குறுக்கு விசாரணை:-</u>

இந்த விபத்திற்குள்ளான வாகனமான TN 50 AT 9715 என்ற வாகனம் 15.01.2024 முதல் 14.01.2025 வரை காப்பீடு நிலுவையில் உள்ளது என்று சொன்னால் நிபந்தனைக்கு உட்பட்டது. மேற்படி வாகனம் விபத்து என்பது 24.06.2024–ல் ஏற்பட்டது என்றால் சரிதான். ஒரு வாகனம் இன்சூரன்ஸ் செய்வது எதற்காக என்றால் அந்த வாகனம் விபத்து ஏற்படும் போது இழப்பீடு தொகை பெறுவதற்கு என்றால் சரிதான். விபத்திற்குள்ளான வாகனத்தில் உதவியாளருக்கு உண்டான இருக்கை உண்டா என்றால் உண்டு. எங்கள் கம்பெனியில் இன்சூரன்ஸ் செய்யப்பட்ட வாகனம் விபத்து ஏற்பட்டால் அதற்கு நஷ்டஈடு தொகை பெற உரிமையுள்ளது என்று சொன்னால் உரிமம் இல்லாமல் சரக்கு வாகனத்தில் பயணம் செய்தால் எங்கள் நிறுவனம் இழப்பீடு கொடுக்க கடமைப்பட்டவர் அல்ல. மனுதாரர் மேற்படி வாகனத்தில் லோடு மேனாக சென்று தான் விபத்து ஏற்பட்டுள்ளதால் மனுவில் கோரியபடி மனுதாரருக்கு இழப்பீடு

தொகை எங்கள் நிறுவனம் கொடுக்க கடமைப்பட்டவர் என்று சொன்னால் சரியல்ல.

**<u>மறுவிசாரணை :– இல்லை</u>**

Typed down to my dictaion, in my Presence and hearing, and under my personal direction and Superintendence and admitted by the witness to be correct.

Subordinate Judge,
Thiruthuraipoondi.